இறைவா எங்களை நீ நேரான வழியில் நடத்துவாயாக (அல்குர்ஆன் 1:5

(நபியே! நீர்) கூறும் நிச்சயமாக அல்லாஹ் காட்டும் வழியே நேர்வழியாகும்.
அகிலங்களின் இறைவனுக்கே வழிபடுமாறு நாங்கள் ஏவப்பட்டுள்ளோம். (அல்குர்ஆன் 6:71)

Srilankamoors.com

சிறீலங்காமுவர்ஸ்.கொம்

بسم الله الرحمن الرحيم

# வரலாற்றில் ஓர் ஏடு

புகழனைத்தும் இறைவனுக்கே. வார்த்தைகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வுடைய வார்த்தையாகும். வழிகாட்டுதல்களில் மிக சிறந்தது நபிகள் நாயகத்தின் வழிகாட்டுதலாகும். காரியங்களில் கெட்டது மார்க்கத்தில் புதுமையை உண்டுபண்ணுவதாகும். புதுமைகள் அனைத்தும் வழிகேடாகும். வழிகேடுகள் அனைத்தும் நரகத்திற்கு இட்டுச் செல்லும். (நூல் : ஸுனன் நஸாயி 1578, ஸஹீஹுல் முஸ்லிம் 867)

தீன் என்பது (மார்க்கம்) அல்லாஹ்வுடைய கட்டளை (குர்ஆன், ஹதீஸ்) நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வழி முறையாகும் என்று நாம் நாவளவில் மாத்திரம் கூறி உள்ளத்தினால் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் "இந்த தூய்மையான இஸ்லாமிய மார்க்கம் அல்லாஹ்வுக்கு) சொந்தமானதாகும்" (குர்ஆன் 39 : 3) இந்த வசனத்தின் அடிப்படையில் ஹலால், ஹராம், சுன்னத், முஸ்தஹப் போன்ற சட்டமிடும் அதிகாரம் அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் அதிகாரம் கிடையாது. அல்குர்ஆனில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். "மார்க்கத்தில் தீர்ப்பு வழஙகும் அதிகாரம் அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் கிடையாது" (6:57)

எமது மரியாதைக்குரிய புழுதிவயல் மக்களே! நாம் இங்கு எதை கூற வருகின்றோம் என்றால் எமது ஊரில் சென்ற 29.05.2011 வெள்ளி அன்று பெரிய பள்ளிவாசலில் மௌலவி நிகார்தீன் அவர்கள் ஜும்ஆ உரை நிகழ்த்தியது யாவரும் அறிந்ததே! பிறகு 03.06.2011 வெள்ளிக்கிழமை அன்று அவருடைய சகோதரர் நௌபர்தீன் ஹாபிழ் ஜும்ஆ தொழுகைக்கு பிறகு லுஹர் தொழ வைத்தார். அதற்குரிய காரணத்தை பின்பவருமாறு கூறினார். "எனது சகோதரர் சென்ற வாரம் நடத்திய ஜும்ஆவில் ஷர்த்து ஒன்று விடுபட்டதாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு லுஹர் தொழவைக்குமாறு கூறினார்" என்றும் சொன்னார்.

ஊர்வாசிகளே! இவர்கள் இருவரும் இப்படி ஒரு செயலை அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் செய்தார்களே இது குர்ஆன் ஆதாரபூர்வமான ஹதீஸ் அடிப்படையில் செய்தார்களா? அல்லது மக்கள் அனைவரும் ஏமாளிகள் என்று அவர்களின் மனோ இச்சைப்படி ஏமாற்றி விடலாம் என நினைத்தார்களா? என்பதை பொது மக்களாகிய உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். மேலும் இது (ஜும்ஆவிற்கு பதிலாக லுஹர் தொழ வைத்தது) இது பற்றி தொலைபேசியின் மூலமாக நிஹார்தீன் மௌலவியிடம் நாங்கள் கேட்ட போது ஏதோ ஒரு ஷர்த்து விடுபட்டதாகவும் அது எனக்கு சந்தேகமாகவும் இருந்த காரணத்தினால் ஜும்ஆவுக்கு பதிலாக லுஹர் தொழ வைக்கச் சொன்னேன் என்று மலுப்பினார். இப்போது நாங்கள் இந்த இரண்டு கண்ணியத்திற்குரிய உலமாக்களிடம் சில கேள்விகளை தொடுக்கின்றோம். நீங்கள் இருவரும் செய்தது போல ஜும்ஆ தொழுகைக்கு பதிலாக லுஹர் தொழ வைக்க முடியுமா? இதற்கு குர்ஆன் ஆதாரபூர்வமான ஹதீஸ் உண்டா? இந்த வாரம் ஜும்ஆவில் ஷர்த் விடுபட்டால் ஷர்த்துக்காக அடுத்த வாரம் ஜும்ஆவுக்குப் பிறகு லுஹர் தொழ முடியுமா? அப்படியானால் சென்ற வாரம் ஜும்ஆவில் கலந்து கொண்டவர்கள் இந்த லுஹர் தொழுகையில் கலந்து கொள்ளாதவர்களின் நிலை என்ன? இவர்கள் பாவிகளா? மேலும் ஷர்த்து விடுபட்டதாக கூறிய ஜும்ஆவில் கலந்து கொள்ளாதவர்கள் இந்த வாரம் ஜும்ஆ தொழுகைக்கு பதிலாக லுஹர் தொழ வைத்ததில் கலந்து கொண்டவர்கள்

இவர்களுடைய ஜும்ஆவும் கூடாதா? ஜும்ஆவுக்கு பதிலாக லுஹர் தொழ வைத்த நௌபர்தீன் ஹாபிழ் ஷர்த்து விடுபட்டதாக கூறிய ஜும்ஆ அன்று புத்தளத்தில் ஜும்ஆ தொழுதார் அப்படியானால் அவருடைய ஜும்ஆவும் கூடாதா? ஷர்த்தை விட்டது நிஹார்தீன் மௌலவி அதற்கு பதிலாக லுஹர் தொழ வைத்தது ஜும்ஆவில் கலந்து கொள்ளாத நௌபர்தீன் ஹாபிழ்! மக்களே! இவர்கள் செய்தது சரிதானா?

ஜும்ஆவின் ஷர்த்துகள் தெரியாதவர்கள் ஜும்ஆ நடத்த முடியுமா? விடுபட்ட ஷர்த்துகளை மக்களுக்கு தெளிவுபடுத்தவில்லை. 40 பேர் இல்லாவிட்டால்தான் ஜும்ஆ தொழுகை கூடாது என்று மக்களை ஏமாற்றினீர்கள். இப்போது 40 பேருக்கு மேல் இருந்தால் உங்கள் இருவரின் வாதப்படி ஜும்ஆ கூடாதா? இதற்கு இன்னும் சில கேள்விகள் இருக்கின்றன. முதலில் நாங்கள் மேலே கேட்ட கேள்விகளுக்கு குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் இந்த எமது மக்களுக்காக பதிலைக் கொடுங்கள் அல்லது அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று மக்களை ஏமாற்றிவிடாதீர்கள். "இமாம்களாகிய உங்களிடத்தில் நாளை மறுமையில் உங்களுடைய பொறுப்புக்கள் பற்றி அல்லாஹ் விசாரிப்பான்" என்ற நபிமொழியை உங்கள் இருவருக்கும் ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம். இன்ஷா அல்லாஹ் கேள்விகள் தொடரும்.

மேலும் ஒரு ஹதீஸையும் ஞாபகப்படுத்தி முடிக்கின்றோம். "மனிதன் மறதியாகவும் தவறுதலாகவும் செய்ததை அல்லாஹ் குற்றம் பிடிக்க மாட்டான்" உள்ளத்தில் உள்ளதை அறியக் கூடியவன் அல்லாஹ் என்ற குர்ஆன் வசனத்தை உங்கள் இருவருக்கும் ஞாபகப்படுத்தியவர்களாக முடிக்கின்றோம்.

வஸ்ஸலாம்

இவ்வண்ணம்
உழுக்காபள்ளம் இஸ்லாமிய அழைப்பு மையம்
தொ. பே. இல. 032 5675280
பெக்ஸ் : 032 567580